Source: *Tamil Murasu,* p3
Date: 29 May 2025

ஆசியான் வேளாண் துறையில் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தை ஆராயும் என்யுஎஸ்

பருவநிலை மாற்றத்தால் தென் கிழக்காசியாவின் வேளாண் துறையில் ஏற்படக்கூடிய தாக் கத்தை அறிய சிங்கப்பூரைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஆசியான் உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயல்பட்டுவருவதாக நீடித்த நிலைத்தன்மை, சுற்றுப்புற அமைச்சர் கிரேஸ் ஃபூ புதன்கிழமை (மே 28) கூறினார்.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் (என்யுஎஸ்) வெப்ப மண்டல கடல்துறை அறிவியல் கழகம் நடத்தும் இந்த ஆய்வு பருவநிலை அபாயங்களை மேலும் நன்கு கையாள உதவும் என்று திருவாட்டி ஃபூ குறிப்பிட் டார். அப்போதுதான் இவ்வட்டா ரம், பருவநிலை மாற்றம் தேசிய

சிங்கப்பூர் கலந்துரையாடலில் பேசும் நீடித்த நிலைத்தன்மை, சுற்றுப்புற அமைச்சர் கிரேஸ் ஃபூ.
படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்

அளவிலும் உள்ளூர் அளவிலும் பயிர் விளைச்சலில் ஏற்படுத்தக் கூடிய பாதிப்பைக் கையாள்வதற் கான நடவடிக்கைகளை நன்கு திட்டமிட முடியும் என்று அவர் சுட்டினார்.

கடந்த 2024ஆம் ஆண்டு தொடங்கிய இந்த ஆய்வு, அடுத்த ஆண்டு இரண்டாம் காலாண்டுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆய்வு, இந்த வட்டாரத்தின் உணவுப் பாதுகாப்புக்கு மெரு கூட்டும் என்றும் அவர் குறிப்பிட் டார்.

சிங்கப்பூர் அனைத்துலக விவகாரக் கழகம் ஏற்பாடு செய்த நீடித்த நிலைத்தன்மை கொண்ட அனைத்துலக வளங்களுக்கான சிங்கப்பூர் கலந்துரையாடலில் திருவாட்டி ஃபூ பேசினார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.